பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
16.08.2025 SATURDAY 7 15 AM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள தென்கொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Cho Hyun, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

2. தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள ஆயிரத்து 150 சுங்கச்சாவடிகளில் 'Fastag - வருடாந்திர பாஸ்' நடைமுறை நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

3. அஸ்ஸாம், மேகாலயா, குஜராத், மஹாராஷ்ட்ரா மாநிலங்களில், அடுத்த 3 நாட்களுக்கு அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

4. பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளபெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 214 ஆக அதிகரித்துள்ளது.

5. மைசூர் ஓபன் கோல்ப் போட்டியில் இந்தியாவின் யுவராஜ் சந்து பட்டம் வென்றார்

------------

தென்கொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Cho Hyun இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

அவரது இந்தப் பயணத்தின் போது, இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருடன் பேச்சு நடத்துகிறார்.

இருநாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

செமிகண்டக்ர் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன், வர்த்தகம் மற்றும் கடல்சார் பாதுகாப்பில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

< < < < < < > > > > > >

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள ஆயிரத்து 150 சுங்கச்சாவடிகளில் 'Fastag - வருடாந்திர பாஸ்' நடைமுறை நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

இந்த புதிய வசதி செயல்பாட்டிற்கு வந்த ஒரே நாளில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பயனாளிகள் வருடாந்திர பாஸை வாங்கியுள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆண்டொன்றுக்கு 3,000 ரூபாயை கட்டணமாக செலுத்துவதன் மூலம் ஒரு ஆண்டிற்கு அல்லது 200 முறை சுங்கச்சாவடியை கடப்பதற்காக இதனை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

அனைத்து வர்த்தகம் சாராத வாகனங்களுக்கும் இந்த வருடாந்திர Fastag முறை பொருந்தும் என்றும் அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

< < < < < < > > > > > >

கோகுலாஷ்டமி தினம் இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இந்த தினத்தை முன்னிட்டு, நாடுமுழுவதும் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக குடியரசுத் தலைவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் வாழ்க்கை மற்றும் அவரது போதனைகளை கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த பண்டிகையின் போது சமூகத்தையும் தேசத்தையும் வலிமையாக்க நாம் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று குடியரசுத் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

< < < < < < > > > > > >

நாட்டின் 79-வது சுதந்திர தினத்தையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நேற்று மாலை விருந்தளித்தார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், திரு பிரதமர் நரேந்திர மோடி, முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ராம்நாத் கோவிந்த், மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா, மற்றும் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் ஆகியோர் பங்கேற்றனர்.

மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு ஜே.பி. நட்டா, டாக்டர் எஸ். ஜெய்சங்கர், திரு பியூஷ் கோயல், திரு மனோகர் லால், திருமதி அனுப்ரியா படேல், திரு அர்ஜுன் ராம் மேக்வால் உள்ளிட்ட பலர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

< < < < < < > > > > > >

யுக்ரைன் – ரஷ்யா இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் - ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் - இடையேயான பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அலாஸ்காவில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தைக்குப் பின்னர், இருதலைவர்களும் செய்தியாளர்களை சந்தித்தனர்.

யுக்ரைன் உடனான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு தாம் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் போது பேசிய அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப், இந்த பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாக அமைந்ததாகவும், விரைவில் நல்ல மாற்றம் ஏற்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

< < < < < < > > > > > >

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆற்றிய சுதந்திர தின உரையில் இடம்பெற்றுள்ள அறிவிப்புகளுக்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்தள்ளனர்.

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பு தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று காஞ்சிபுரம் மாவட்ட வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

< < < < < < > > > > > >

அரியவகை கனிமங்களுக்கான தேசிய இயக்கத்தின் கீழ், நாட்டிலுள்ள முக்கியமான கனிம வளங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளதற்கு பலுசிஸ்தான் மாகாண மனித உரிமை ஆர்வலர் திரு மிர் யார் பலோச் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அறியவகைக் கனிமங்களின் உற்பத்தியில் தன்னிறைவை எட்டுவதற்கான இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சிகளை வரவேற்பதாக கூறியுள்ளார்.

< < < < < < > > > > > >

நாட்டின் வணிகப் பொருட்களின் ஏற்றுமதி, புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வணிக பொருட்களுக்கான ஏற்றுமதி கடந்த மாதத்தில் 7 புள்ளி 3 சதவீதம் அதிகரித்து 37 புள்ளி இரண்டு நான்கு பில்லியன் டாலராக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னணு சாதனங்கள், செயற்கை கற்கள், மருந்துப் பொருட்கள், உரங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

நடப்பாண்டில் வணிக பொருட்களின் ஏற்றுமதி, 149 புள்ளி 2 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

< < < < < < > > > > > >

முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயின் 7வது ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, புதுதில்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் தலைவர்கள் பலர் மலர் தூவி மரியாதை செலுத்துகின்றனர்.

கடந்த 2015ஆம் ஆண்டு நாட்டின் மிக உயரிய விருதான பாரதரத்னா விருது, அவருக்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

< < < < < < > > > > > >

வடமேற்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளபெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 214 ஆக அதிகரித்துள்ளது

அப்பகுதியில் உள்ள கிராமங்களில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெள்ளநீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் உள்ள இணைப்புச் சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்து தடைபட்டுள்ளதாக அந்நாட்டுத் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

< < < < < < > > > > > >

அஸ்ஸாம், மேகாலயா, குஜராத், மஹாராஷ்ட்ரா, தெலங்கானா, உத்ராகண்ட் மற்றும் மத்தியப்பிரதேச மாநிலங்களில், அடுத்த 3 நாட்களுக்கு கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கொங்கன் மற்றும் கோவாவில் ஒரு சில இடங்களில் அதிகனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா, சத்திஷ்கட், ஆந்திரா மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் கனமழை பெய்யும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், கர்நாடக மாநிலத்தின் கடலோரப் பகுதிகள், கேரளா, மாஹே, லட்சத்தீவுகள், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் ஒரு சில இடங்களில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

< < < < < < > > > > > >

ஜார்க்கண்ட் மாநில கல்வி அமைச்சர் திரு. ராமதாஸ் சோரன், உடல்நலக்குறைவு காரணமாக புதுதில்லியில் நேற்று காலமானார்.

புதுதில்லியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக அவரது மகன் உறுதி செய்துள்ளார்.

< < < < < < > > > > > >

மைசூர் ஓபன் கோல்ப் போட்டியில் இந்தியாவின் யுவராஜ் சந்து பட்டம் வென்றார்.

மைசூருவில் நேற்று நடைபெற்ற இறுதி போட்டியில் அவர் பங்காளதேஷின் ஜமால் ஹுசைன் - ஐ வென்று இப்பட்டத்தைக் கைப்பற்றினார்.

நடப்பாண்டில் அவர் பெறும் மூன்றாவது பட்டம் இதுவாகும்.

< < < < < < > > > > > >

சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் பட்டம் வென்றார்.

லாவோஸில் நடைபெற்ற இப்போட்டியில் அவர் *3-0* என்ற புள்ளி கணக்கில் ஜப்பானின் *Ryōichi Yoshiyama*-யை வென்று இப்பட்டத்தைக் கைப்பற்றினார்.

< < < < < < > > > > > >

*சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியில் இந்தியாவின் பிரனேஷ், சேலஞ்சர்ஸ் பிரிவில் பட்டம் வென்றார்.*

*சென்னையில் நடைபெற்ற போட்டியில் 6 புள்ளி ஐந்து புள்ளிகளை பெற்று அவர் வெற்றி பெற்றார்.*

*< < < < < < > > > > > >*

*ஆசிய துப்பாக்கி சாம்பியன்ஷிப் போட்டிகள் இன்று தொடங்குகிறது.*

*கஜகஸ்தானில் உள்ள ஷிம்கென்ட் நகரில் நடைபெறும் இப்போட்டிகள் இம்மாதம் 30 - ம் தேதி வரை நடைபெறுகிறது.*

*இந்தியா சார்பில் இரண்டு முறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற மனு பாக்கர், தலைமையிலான அணியில் 164 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.*

*இதில் 28 நாடுகளைச் சேர்ந்த 734 துப்பாக்கி சுடும் வீரர்கள் பங்கேற்கின்றனர்.*

*< < < < < < > > > > > >*